# முரசொலி

பக்கங்கள் நான்கு — விலை ரூபா; 5-00

முரசு 05 ஒலி 223 ஆங்கீரச ஆனி 23 ( 07 . 07 . 1992 ) செவ்வாய்

## துண்டுகள் விழுந்ததை மக்களே நேரில் கண்டனர்

விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தப்பட்ட வை-8 விமானம் பல கறுப்பு நிறத் துண்டுகளாக நிலத்தை நோக்கி விழ்ந்ததாக, நேரில் கண்ட மருதங்கேணி, செம்பியன்பற்று கிராம வாசிகள் பலர் தெரிவித்தனர். சம்பவத்தினத்தன்று வை-8 விமானம் போர் முனைப் பகுதியை உள்ளடக்கிய இடங்களைச் சுற்றி வட்டமிட்டு குண்டுகளை வீசிக் கொண்டிருந்தது. இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கையில் திடீரென பெரும் சத்தத்துடன் தீ பிழம்பு தோன்றி புகை மண்டலம் மேலே கிளம்பியது. இதனைத் தொடர்ந்து பல கறுப்பு — 04 ஆம் பக்கம் பார்க்க

# சிறில், ஹமில்டன், ரெரன்ஸ்

# வடபகுதிக்கு அவசர விஜயம்

## விமானம் சுட்டுவீழ்த்தியமைக்கு வெரித்தாஸின் ஆதாரங்கள்

வை-8 விமானப்படை விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தவில்லை என படையினர் மறுத்துவருகின்ற போதிலும் களநிலையைப் பார்க்கும் போது புலிகளின் தாக்குதலில் விமானம் வீழ்ந்தது புலப்படுகிறது என வெரித்தாஸ் வானொலி நேற்று தகவல் வெளியிட்டது.

இதற்கு ஆதாரமாக அவ் வானொலி பின்வரும் நிலைமைகளை சுட்டிக்காட்டியது.

★ விமானம் வெடித்தது புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில்.

★ புலிகளிடம் ஏற்கனவே 50 மில்லிமீட்டர் குண்டுகள் இறும் பீரங்கிகள் உண்டு.

★ புலிகளின் இக்கனைய ஆயுதங்கள் இரண்டாயிரம் மீற்றருக்கு உயர —04 ஆம் பக்கம் பார்க்க

### பெயர் கூறாத படை அதிகாரி கருத்து

## விமானப்படைக்கு ஓர் பின்னடைவே

"இப்போது கிடைத்துவரும் தகவல்களின்படி விமானப் படைக்கு சொந்தமான வை-8 விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தியிருப்பதற்கான சாத்தியங்களை நிராகரித்துவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது"

இவ்வாறு பெயர் கூற விரும்பாத கொழும்பிலுள்ள விமானப்போக்குவரத்து அதிகாரிகள் குறிப்பிட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இவ் விமானம் வீழ்த்தப்பட்டது விமானப்படைக்கு ஓர் பின்னடைவே என பெயர் குறிப்பிடாத படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## புல்லாவெளியில் எட்டாம் நாளாக தொடர்ந்து மோதல்

புல்லாவெளிப்பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று எட்டாவது நாளாகவும் மோதல்கள் இடம்பெற்றன.

நேற்றைய மோதல்களில் வழமைக்கு மாறாக படையினர் தரப்பில் தாக்குதல் மந்தமாகவே காணப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. 07

## சீதனவெளியில் படையினர் சூடு 20 தமிழர்கள் காயம்

திருமலையில் சீதன வெளி கிராமம் கடந்தவாரம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டது. சுற்றிவளைப்பின் போது படையினர் பல தடவை துப்பாக்கிச் சூடுகளை நடத்தியபடி இருந்தனர்.

இதனால் 20 தமிழ் மக்கள் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்தனர். காயமடைந்த மக்களை சிகிச்சைக்காக ஆஸ்பத்திரி செல்ல படையினர் அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் கடும் மழை பல இடங்களில் வெள்ளம்

நேற்று பிற்பகல் கொழும்பில் கடும் மழைபெய்ததினால பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

கிறீன்பாத், கனத்தைப் பகுதி, ஹோட்டன் பிளேஸ், மக்கலம் வீதி, டீன்ஸ் வீதி ஆகிய இடங்களில் வெள்ளத்தினால் போக்குவரத்துகள் ஸ்தம்பித்துள்ளன.

பிரிஸ்டல் ஒப்வேலஸ் பகுதியில் வீதியால் சென்ற பஸ் வண்டி ஒன்றின் மீது பாரிய மரம் ஒன்று சரிந்து வீழ்ந்தது. பஸ் சேதமடைந்த போதிலும் பயணிகள் காயமின்றி தப்பினர்.

இதனிடையே இலங்கைக்கு அருகில் வளிமண்டலத்தில் —04 ஆம் பக்கம் பார்க்க

## பலாலி, வெற்றிலைக்கேணியில் அதிகாரிகள் கூடி ஆராய்வு

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க, கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க மற்றும் விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் ரெரன்ஸ் குணவர்த்தனா ஆகிய மூன்று உயர் பாதுகாப்பு அதிகாரிகளும் மற்றும் அதிகாரிகளும் நேற்று அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்டு வடபகுதிக்கு விஜயம் செய்தனர். இவர்கள் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவும் போரிலீடுபட்டுள்ள படைகளை உற்சாகப்படுத்தவுமே வடபகுதிக்கு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை சிறில் ரணதுங்கவும், ஹமில்டன் வனசிங்கவும் பலாலி முகாமிற்கு விமானத்தில் வந்திறங்கி அங்கு மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவாவுடன் பேச்சுகள் நடத்தினர்.

இவர்களுக்கு முன்னதாக விமானப்படை தளபதி ரெரன்ஸ் குணவர்த்தனா பலாலிக்கு வந்திருந்தார்.

வடபகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள விமானப் படை அதிகாரிகளை சிறில் ரணதுங்க சந்தித்துப் பேசினார்.

இதைத்தொடர்ந்து நேற்று = 04 ஆம் பக்கம் பார்க்க

★ வை-8 விமானம் வீழ்த்தப்பட்டதில்

## ஸ்குவாட்ரன் லீடர் தரத்திலான விமானப்படை அதிகாரியும் பலி

### வோல்டர் பெர்னான்டோவின் மகன்

நேற்று முன்தினம் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட வை-8 விமானத்திலிருந்த 19 விமானப்படையினரில் 6 பேர் விமான படை அதிகாரிகள். இவ்வதிகாரிகளில் ஒருவர் விமானப்படையில் 'ஸ்குவாட்ரன் லீடர்' தரத்திலான உயரதிகாரி என அறிவிக்கப்படுகிறது. இந்த விமானப்படை உயரதிகாரி ஸ்ரீலங்கா விமானப்படையின் துணைத் தளபதியும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளருமான வைஸ்மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோவின் மகன் என்பது —40 ஆம் பக்கம் பார்க்க

## வீழ்ந்த விமானம் பலவேகய படைக்கு பொருள்கள் எடுத்து வந்ததாம்

நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 விமானம் தற்போது போரிலீடுபட்டுள்ள பலவேகய படையினருக்கு தேவையான உணவுப் பொருள்களையும் வெடிமருந்து மற்றும் ஆயுதங்களையும் பலாலிக்கு எடுத்துச் சென்றதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானம் வீழ்ந்ததில் விமானியும், உதவி விமானியும் பலியானதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக் கொண்டன.

★ இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

## விமானத்திற்குஎன்னநடந்தது என்பது தெரியவில்லை

நேற்று முன்தினம் வெடித்து சிதறிய விமானப் படையின் வை-8 விமானம் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதா அல்லது நடுவானில் வெடித்ததா என இன்னமும் தெரியவில்லை என்கிறார் இராணுவப் பேச்சாளர் சேனக சரத் முனசிங்க.

இயந்திரக் கோளாறினால் கூட விமானம் வெடித்திருக்கலாம் என்றும் வீழ்ந்த விமானத்தின் பாகங்களை படையினர் மீட்பதற்கு அப்பகுதிக்கு விரைந்துள்ளனர் என்றும் முனசிங்க தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் தம்மை உற்சாகம் படுத்தவே விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக கூறுகின்றனர் எனக் குறிப்பிட்ட சரத் முனசிங்க விமானத்தின் பாகங்களை மீட்க படையினர் இயக்கச்சிக்குசெல்வர் என்றார்.

முன்னதாக சேனக முன ...04 ஆம் பக்கம் பார்க்க

## பி. பி. ஸி கருத்து

விடுதலைப் புலிகளால் ஒரு விமானத்தை வீழ்த்தும் அளவுக்கு பலம் உண்டு என்று கூறப்படுகிறது இவ்வாறு ...04 ஆம் பக்கம் பார்க்க

★ விடுதலைப்புலிகளினால் வை - 8 சுட்டு வீழ்த்தப்பட்டதன் மூலம்

# யுத்தமுனையில் நன்கு தேர்ச்சி பெற்ற - பல விமானிகளையும் ஒரே தடவையில் விமானப்படை இழந்தது!

இயக்கச்சிப்பகுதியில் நேற்று முன்தினம் மாலை இலங்கை விமானப்படையின் சீனத் தயாரிப்பான வை- 8 விமானம் வீழ்ந்து நொருங்கியதை இலங்கை அரசு காலம் தாழ்த்தி நேற்றுக் காலை ஒப்புக் கொண்டுள்ளது

இந்த விமானத்தில் ஆறு விமானப்படை அதிகாரிகளும் 13 சிப்பாய்களும் இருந்ததாகவும் விமானம் இரத்மலானை விமானப்படைத் தளத்திலிருந்து வெடிமருந்துகளுடன் புறப்பட்டு வடபகுதியை நோக்கிச் சென்றதாகவும் அவ்வேளை இச்சம்பவம் நிகழ்ந்ததாகவும் அரசுமேலும் தெரிவித்தது.

இச்சம்பவம் பற்றி விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## புலிகளின் குரல் முதலில் அறிவித்தது

விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்பு படைப்பிரிவினால் இந்த வை - 8 விமானம் இயக்கச்சி யுத்த முனையில் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்தை 'புலிகளின் குரல்' வானொலி அதன் செய்தியறிக்கையில் நேற்று முன்தினம் இரவு 8. 30 மணிக்கு முதலில் அறிவித்தது.

அதனைத் தொடர்ந்து பி. பி ஸி. வொய்ஸ் ஒஃப் அமெரிக்கா வானொலிகளும் இச்செய்தியை அதன் பின்னர் ஒலிபரப்பின.

## இலங்கை வானொலி இரவில் மௌனம்

ஆனால் இலங்கை வானொலி அன்றைய தினம் இரவு தனது மும்மொழிச் செய்தியறிக்கைகளிலும் இது பற்றி எதுவுமே தெரிவிக்காது மௌனம் சாதித்தது.

## 100 துருப்புக்களை ஏற்றலாம்

ரஷ்ய வடிவமைப்பை பின்பற்றி சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த வை - 8 விமானம் சுமார் 100 துருப்புக்களை ஏற்றிச் செல்லும் இடவசதியைக் கொண்டது. இதனை இயக்குவதற்கு 5 பேர் தேவைப்படுகின்றார்கள்.

## 412 மைல் வேகம் கொண்டது

நூற்றிப்பதினொன்றரை அடி நீளமும் முப்பத்தைந்தரை அடி உயரமும் கொண்ட இந்த சீனச் சகடை விமானம் மணித்தியாலத்திற்கு 412 மைல் வேகத்தில் செல்லக்கூடிய நான்கு இயந்திரங்களை கொண்டது. வை - 8 ரக விமானங்களில் ஏககாலத்தில் 30,177 லீற்றர் எரிபொருளை எடுத்துச்செல்லக்கூடிய பாரிய தாங்கி ஒன்றும் உள்ளது.

## வாகனங்களையும் எடுத்துச் செல்லலாம்

சீனாவில் சிவில் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் இந்த விமானம் குறிப்பிட்டளவு பொதிகளையும் எடுத்துச் செல்லக்கூடிய இடவசதிகளையும் கொண்டது.

சீனாவில் இந்த பழைய ரக விமானங்களை போக்குவரத்தில் இருந்து ஒதுக்கி வைக்க தீர்மானிக்கப்பட்டதையடுத்து. இவற்றை குறைந்த விலையில் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய சீன அரசு முடிவெடுத்தது.

## சீனா விற்றதை இலங்கை வாங்கியது

இதனையடுத்து இந்த வை -8 ரக விமானத்தையும் அதனுடன் ஒத்த வை - 12 விமானங்களையும் குறைந்த விலையில் சீனாவிடமிருந்து இலங்கை கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்தது.

## போருக்காக மாற்றியமைப்பு

சிவில் போக்குவரத்துக்கு ஏற்றதாக வடிவமைக்கப்பட்டிருந்த இந்த சீன விமானங்கள் இரத்மலானையில் உள்ள விமானப்படை வேலைத்தளத்தில் வைத்து யுத்தத் தேவைக்குப் பயன்படுத்தக்கூடிய வகையில் மாற்றியமைக்கப்பட்டு வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்த தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

## பீப்பாய்க் குண்டுகளை வீசித்தள்ளியது

யாழ். கோட்டை முற்றுகைப் போரின் போது யாழ் நகரில் இலக்கின்றி பல கிலோ நிறையுடைய பீப்பாய்க் குண்டுகளை வீச இந்த வை 8 ரக விமானங்களே பயன்படுத்தப்பட்டு வந்தன

## சரிந்தது சகடை

பல உயிர்களைப் பறிக்கவும், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தமிழ் மக்களின் உடமைகளை நாசப்படுத்தவும் இலங்கை அரசால் பயன்படுத்தப்பட்ட இந்த விமானத்தை யாழ் மக்கள் 'சகடை' எனக் குறிப்பிட்டு வந்தனர்.

## சீனர்களின் பராமரிப்பு

இந்த விமானத்தை பராமரிப்பதற்கெனவும், இலங்கைப் படையினருக்குப் பயிற்சியளிப்பதற்கெனவும் சீன விமான தொழில்நுட்ப வல்லுனர்கள் இரத்மலான விமானப்படைத் தளத்தில் தங்கியிருந்து பணிபுரிந்து வருகின்றனர்.

இரத்மலானையிலிருந்து பலாலியிலுள்ள இராணுவ முகாமுக்கு அதிகளவில் துருப்புக்களையும், மற்றும் இராணுவ தளபாடங்கள், எரிபொருள் என்பனவற்றையும் எடுத்து வருவதற்கும் இந்த வை—8 ரக இராட்சத விமானமே விமானப் படையினரால் இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்தது.

## விமான ரோந்து ஸ்தம்பித்தது

பலாலியிலிருந்து யாழ். கண்டி வீதி வாகனப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் வகையில் தென்மராட்சி கொடிகாமப் பகுதிகளினூடாக அடிக்கடி ஓயாது ரோந்து சுற்றிவந்த விமானங்களும் ஹெலிகப்டர்களும் இந்த வை-8 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதனையடுத்து நேற்று முன்தினம் மாலை தம் ரோந்தை நிறுத்திக்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

## பாதையை மாற்றிய விமானங்கள்

கட்டைக்காடு யுத்த முனைக்கு சென்றுவந்த யுத்த விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தம் வழமையான பாதையை மாற்றி கடற்பகுதி ஆகாயப் பாதையையே பயன்படுத்தியதையும் அவதானிக்க முடிந்தது.

## அதி உயரத்தில் வந்து திரும்பின

நேற்றுக்காலை இரத்மலானையிலிருந்து பலாலிக்கு வந்து சென்ற மற்றொரு இராட்சத விமானமும் வழமையைவிட அதிக உயரத்திலேயே பறந்து சென்றதையும் கவனிக்க முடிந்தது

யுத்தமுனையில் போர் விமானங்களைப் பயன்படுத்த நன்கு பயிற்சி பெற்ற பல விமானிகளை இச்சம்பவத்தின் மூலம் இலங்கை விமானப்படை இழந்திருப்பதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அதிகாரிகளுக்கு பேரதிர்ச்சி

வை-8 ரக இந்த இராட்சத விமானம் விடுதலைப்புலிகளினால் யுத்த முனையில் வைத்து சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளமை இலங்கை படை அதிகாரிகள் மட்டத்திலும், அரசு மட்டத்திலும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது

விமானம் வீழ்ந்த இடம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதி என்பதனையும் படை உயரதிகாரிகள் கொழும்பில் ஏற்றுள்ளனர்.

# சிதைவுகளுடன் விமானியின் சடலமும் பார்வைக்கு

விடுதலைப் புலிகளினால் நேற்று முன்தினம் சுட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 இராட்சத விமானத்தின் பெரும்பாலான சிதைவுகளும், அந்த விமானத்தின் விமானிகளுள் ஒருவரின் சடலமும் நேற்றுக் காலை கொண்டாவிலில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன

பெருந்திரளான பொது மக்கள் சாரி, சாரியாக வந்து இவற்றைப் பார்வையிட்டுச் சென்றனர்,

விமானத்தின் சிதைவுகளில் இருந்து இந்த விமானம் நீளம் வெள்ளை நிறத்தை பெரும்பாலும் கொண்டதாக இருந்துள்ளது என அனுமானிக்க முடிந்தது.

# இயக்கச்சியை கைப்பற்றுவதே 'பலவேகய -II' இன் நோக்கமாம்

'பலவேகய - II' இராணுவ நடவடிக்கையின் நோக்கம் இயக்கச்சிப் பகுதியை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதே என கூட்டுப்படைத் தலைமையகம் நேற்று முன்தினம் தெரிவித்தது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவ நடவடிக்கைகள் ஏழாவது நாளாகவும் தொடர்ந்ததாகவும் பெருமளவு படையினர் வெற்றிலைக்கேணி பகுதியில் கடல் மார்க்கமாகத் தரையிறக்கப்பட்டு இந்நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் மேலும் தெரிவித்தது.

★ பள்ளேகல தடுப்பு முகாமில்

# ஜே. வி. பி. தடுப்புக் கைதிகள் அகழி அமைத்து தப்பியோட்டம்!

ஜே. வி. பி. சந்தேகநபர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள பள்ளேகல தடுப்பு முகாமில் கைதிகள் வெளியே தப்பிச் செல்ல பயன்படுத்தியதாகக் கூறப்படும் சுரங்கப்பாதையொன்று தற்பொழுது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த சுரங்கம் 45 அடி நீளமானது இது இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் ஜேர்மன் யுத்தக் கைதிகள் அகழி தோண்டி தப்பிச் சென்ற பாணியில் அமைந்துள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன

இந்த அகழிக்கூடாகத் தப்பியவரும் கைதிகள் முகாமைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் பிவேலிக்கூடாக தவழ்ந்து தப்பிச் சென்றுள்ளனர்

கடந்த 18 ஆம் திகதி பள்ளேகல தடுப்பு முகாமிலிருந்து பல ஜே வி. பி சந்தேக நபர்கள் தப்பிச் சென்றிருந்தது தெரிந்ததே.

# பர்மிய முஸ்லிம் எம். பி. இராணுவத்தால் அடித்துக்கொலை

பர்மிய இராணுவத்தினர் பர்மிய முஸலிம் எம் பி. ஒருவரை அடித்துக் கொன்றிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பங்களாதேஷில் அடைக்கலம் புகுந்துள்ள பர்மிய முஸ்லிம்களை நாடு திரும்புமாறு கோரிக்கை விட அவர் மறுத்ததே இக்கொலைக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது

# முஸ்லிம்களை திருப்திப்படுத்தாத எந்தவொரு தீர்வையும் ஏற்கோம்

-அஸ்ரப்

மட்டக்களப்பு, திருகோணமலை வன்னி மாவட்ட முஸ்லிம்களை திருப்திப்படுத்தாத எந்தவொரு தீர்வுக்கும் முஸ்லிம் காங்கிரஸ். தமிழ்க் கட்சிகளுடனானபேச்சுவார்த்தைகளின் போது உடன்பாட்டிற்கு வராது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் எம். பி. முஸ்லிம் காங்கிரஸின் 11வது பேராளர் மகாநாட்டை நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பித்து வைத்து பிரதான உரை நிகழ்த்துகையில் மேற்குறிப்பிட்ட முடிவை அறிவித்தார்.

# ஆஸி. நாட்டவரின் சாதனையை தமிழ் இளைஞர்கள் முறியடிப்பு

தமிழ் நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் 18 நாட்கள் தொடர்ந்து பாட்டுக்களைப் பாடி உலக சாதனைப் புத்தகமான 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பிடித்துள்ளனர்.

இராஜேஸ்வரன், விஸ்வாமித்திரன் ஹாஜி என்ற இந்த மூன்று இளைஞர்களும் தொடர்ச்சியாக 300 மணி நேரம் 601 பாடல்களைப் பாடி இச்சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

முன்னர் 131 மணிநேரம் தொடர்ச்சியாகப் பாடல்களைப்பாடி கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்த அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சதக்காடடின் சாதனையை இதன் மூலம் இவர்கள் முறியடித்தனர்

ஜூன் 17 ஆம் திகதி தொடங்கிய இந்த இளைஞர்களின் சாதனை நிகழ்ச்சியின் போது மேடையிலேயே விஸ்வாமித்திரன் பாட்டுக்கள் எழுத ஹாஜி பின்னணி இசையைக் கவனித்துக் கொள்ள இராஜேஸ்வரன் தொடர்ச்சியாகப் பாடினார்.

# மனிதநடமாட்டம் இல்லாத சிறுத்தீவில் பெண்ணின் சடலம்

யாழ் குடாக்கடல் பகுதியில் உள்ள சிறுத்தீவு பகுதியின் பின்புறத்தில் பெண்மணியொருவரின் சடலம் கரை யொதுங்கியுள்ளதாக அப்பகுதியில் தொழில் செய்யும் மீனவர்கள் தெரிவித்தனர்.

குடியிருப்பு எதுவுமற்ற இந்த சிறுத்தீவு குருநகர்ப் பகுதியிலிருந்து சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் கடலில் அமைந்துள்ளது.

கடந்த சில தினங்களாக அப் பகுதியில் காணப்படும் இப் பெண்ணின் சடலம் மஞ்சள் நிற சாறியொன்றில் சுற்றப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஜே. ஆரின் அறிவுரை

சமயப் போதகர்களின்போதனைகளுக்கு ஏற்ப ஒவ்வொருவரும் அவரவர் சமயத்தை சரியாகப்பின்பற்றும் போது நாடு விமோசனமடைந்து சமாதானம் ஏற்படுமென தெரிவித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி. ஜே. ஆர், ஜயவர்த்தனா.

# கைதானோரை விடுவிக்க உதவுவதாகக் கூறி மோசடி

மட்டக்களப்பு பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் வாலிபர்களை விடுதலை செய்ய உதவுவதாகக் கூறி அவர்களது பெற்றோரிடம் பணம் பறிக்கும் கும்பலொன்று இயங்கி வருகிறதாம்.

இந்தக் கும்பலில் சில பெரிய புள்ளிகளுக்கும் பங்கிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

இதே போன்ற மோசடிச் சம்பவமொன்றில் ஈடுபட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அணு ஆயுதங்கள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டதாக அறிவிப்பு

பல நாடுகளிலுமுள்ள தனது படையணிகளிலிருந்து அணு ஆயுதங்களை கலைக்கும் பணியை அமெரிக்க இராணுவமும், கடற்படையும் நிறைவுசெய்து விட்டதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அணு ஆயுத படை சாதனங்களின் எண்ணிக்கையை கணிசமான அளவுக்குக் குறைப்பதாய் கடந்த செப்டம்பரில் தான் கொடுத்திருந்த வாக்குறுதி இதன் மூலம் நிறைவேற்றப்பட்டு விட்டதாகவும் அவர் கூறினார்.

இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் மீது வைக்கப்பட்டிருந்த 'பிரெய்டன்' நீண்ட தொலைவு ஏவுகணைகள் மட்டும்தான் இப்பொழுது கடலில் வைக்கப்பட்டுள்ள ஒரே அமெரிக்க அணுவாயுதமெனவும் புஷ் தெரிவித்தார்.

# பாடசாலைத் தரிசிப்பு வாரத்தில் ஒருநாள் மட்டுமே!

யாழ் மாவட்டத்தில் ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டவர்கள் தங்களது பாடத்துறையை மேற்பார்வை செய்வதற்காக வாரத்தில் திங்கட்கிழமைகளில் மட்டுமே பாடசாலைகளுக்கு செல்லவேண்டுமென அறிவுறுத்தப்படுவது.

மேலதிகமாக செல்லவேண்டியேற்படின் பட்டதாரி ஆசிரிய ஆலோசகர்கள் இது தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தை இவர்களுக்குப் பொறுப்பாக உள்ள உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பித்து அனுமதியையும் பெறவேண்டும் என யாழ் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் பணித்துள்ளார்.

# கலைப் பீடத்திற்கு 2720 புதிய மாணவர் தெரிவு!

நாடு முழுவதிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் புதிய கல்வி ஆண்டிற்கான பட்டப்படிப்பை ஆரம்பிப்பதற்கென புதிதாக ஒன்பதாயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவர்கள் ஒன்பது பல்கலைக்கழகங்களில் தமது பட்டப்படிப்பை மேற்கொள்ளுவர்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் 180 முதல் 292 புள்ளிகள் வரை பெற்றோரே இவர்களாவர்.

இவர்களில் அனேகமானோர் கலைத்துறைக்கே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் ஆதாவது 2720 பேர் கலைத்துறைக்கென தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள இவர்களுக்கு அடுத்த மாதம் முதல்-அக்டோபர் வரை ஆங்கில போதனை நடத்தப்படவுள்ளது.

# ஆதரவற்றவர்களாக்கப்பட்டோர் விவரம் சேகரிக்கப்படுகிறது

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட பயங்கரவாத வன்செயல்கள் காரணமாக, வடக்குக், கிழக்கு மாகாணத்தில் அநாதைகளாகவும் ஆதரவற்றவர்களாகவும் ஆக்கப்பட்டுள்ள 18 வயதுக்குட்பட்டோரது விவரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டு, கிராமசேவையாளர் பிரிவு மட்டத்தில் மதிப்பாய்வு நடைபெற்றுவருகிறது இவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன

இதுவரை மேற்படி ஆய்வுக்குத் தங்கள் பெயரைப் பதிவு செய்யாதவர்கள் தங்கள் பகுதிக்குரிய சமூக சேவை உத்தியோகத்தருடன் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். 25

# ரூபா நோட்டுக்களின் தரம் குறைவாக உள்ளதாகப் புகார்

கடந்த வருடங்களில் நாட்டில் பாவனைக்கு விடப்பட்ட நோட்டுக்களின் தரம் குறைவாக இருந்ததாக மத்திய வங்கியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இதனையடுத்து தரமான காகிதத்தில் அச்சிடப்பட்ட ரூபா நோட்டுக்களை வழங்குவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

# யூகோஸ்லாவிய தூதுவரை பாகிஸ்தான வெளியேற்றியது!

பாகிஸ்தானிலிருக்கும் யூகோஸ்லாவிய தூதுவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறுமாறு பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு உத்தரவிட்டுள்ளது,

பெல்கிரேட்டின் முஸ்லிம் எதிர்ப்புக் கொள்கைக்கு உடனடியாக பதிலடி கொடுக்கும் நடவடிக்கையே இது வெனவும் தெரிவிக்கப்படுகிறது,

# முடிவு திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் ஆண்டுதோறும் நடத்தும் அகில இலங்கைச் சைவசமயப் பரீட்சை விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 15 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அதன் பரீட்சைச் செயலாளர் தெரிவித்துள்ளார். 18

## ஆலயங்கள் மீதான தாக்குதல்

# ஜனாதிபதியின் "கவலை" போதாது

# முழுமையான நட்டஈடு வழங்கவேண்டும்

1992 மே மாதம் பதினெட்டாம் திகதி வற்றாப்பளை அம்மன் கோவில் மீது குண்டு வீசியதில் பதினைந்து பேர் மரணமானார்கள் இருபத்தைந்து பேர் காயமடைந்தனர்.

1992 மே மாதம் முப்பதாம் தேதியும் ஜூன் மாதம் பத்தாம் திகதியும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில் மீதும் அதன் வீதிச்சுற்றாடல் மீதும் நடாத்திய குண்டு வீச்சில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர் இருபத்தைந்து பேருக்குமேல் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களை எதிர்த்து ஆட்சேபணை மகஜர்கள் அனுப்பப்பட்டதுடன் ஆர்ப்பாட்ட பேரணியும் நடாத்தப்பட்டது.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் மீது தாக்குதல் நடத்தவில்லையென இராணுவப் பேச்சாளர் மறுத்தார் மறுப்புத் தெரிவித்த நான்கு நாள்களுக்குள் மீண்டும் குண்டுத்தாக்குதல் நடாத்தப்பட்டது

இந்த தாக்குதல்களுக்கெதிராக இலங்கை இந்து சமய பேரவையும் ஜனாதிபதிக்கு எழுதியிருந்தது இந்தப்பேரவை நேற்றுமுன்தினம் வெளியிட்ட தகவல்களின்படி ஜனாதிபதி பிரேமதாஸ இங்கு இரண்டு ஆலயங்கள் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக "கவலை" தெரிவித்துள்ளார் எனத் தெரியவருகிறது

தாக்குதல்களை முதலில் மறுத்த அரசு இப்பொழுது அதை ஏற்றுக் கொண்டுள்ளது அரசாங்கத்தின் சாதாரண நடைமுறை எதையும் மறுப்பதுதான் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்ட இந்த சந்தர்ப்பம் மிகவும் அசாதாரணமானது என்றாலும் தவிர்க்க முடியாமல் போனதாலும் வலுவான பரந்த அடிப்படையிலான ஏகோபித்த எதிர்ப்புகளின் காரணமாகவே ஜனாதிபதியே வருத்தம் தெரிவித்துள்ளார் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு பதில் பெற்றவர், விஸ்வ ஹிந்து பரிசத்தின் தலைவரும் கூட!

தமிழ்மக்களைப் பொறுத்தவரை இந்தக் "கவலை" தெரிவிப்பு எல்லாம் வெறும் கண் துடைப்பே கவலை தெரிவித்தல் மட்டும் காரியமெதுவும் ஆகிவிடாது. அது கருமமாக மாறவேண்டும், அரசு தன் கடமையைச் செய்யவேண்டும்.

1981 ஜூன் முதலாம் திகதி யாழ் நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாகவும் கவலைகள் தெரிவிக்கப்பட்டன ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது. ஒரு கோடி

## எஸ். ஜி. எம்.

ஐந்து லட்சம் நஷ்ட ஈடு நிர்ணயிக்கப்பட்டு அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது இருபது லட்சத்தோடு விடயம் வசதியாக மறக்கப்பட்டுவிட்டது.

இந்த இரண்டு ஆலயங்களுக்கும் ஏற்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது,

அரசாங்க அதிபர்கள் நியாயமான முறையில் அறிக்கைகளைச் சமர்ப்பிப்பார்கள் என்பதில் சந்தேகமிருக்கமுடியாது. ஆனால் அந்த அறிக்கைகளுக்குச் சிங்கள இனவெறி அதிகாரிகள் மட்டத்திலும், அரச மட்டத்திலும் என்ன நடக்கும் என்பதுதான் கேள்வி, வழமைபோல பொறியியல், கணிப்பீடுகள் போன்ற ஆய்வுகளை நடத்தி அறிக்கைகளில் குற்றங் காணவே கொழும்பு முயலும்.

ஜனாதிபதியின் அறிவிப்பு ஆலயக் கட்டடங்களை மட்டும் உள்ளடக்கியதாக இருக்கிறது. அப்படியானால் இத் தாக்குதல்களினால் கொல்லப்பட்டவர்களதும், காயமடைந்தவர்கள். அங்கவீனர்களாகியோர்களது நிலை என்ன என்பது தெளிவாக இல்லை வசதியாகக் கைவிடப்பட்டு விட்டன என்றே தோன்றுகிறது.

ஜனாதிபதியின் கவலை தெரிவிப்பு ஏதோ இயல்பாக எழுந்த ஒன்று என எண்ணிவிடமுடியாது. சில பொது அபிப்பிராயங்களைத் திருப்திப்படுத்தவே இக் கவலை தெரிவிப்பு!

எவ்வாறாயினும் ஜனாதிபதியின் 'கவலை'யை அரசின் நட்டஈடு வழங்கும் கடமையாக மாற்ற வேண்டும். அந்தக் கடமை இவ்விரு ஆலயங்களின் புனரமைப்புக்கும் பாதிக்கப்பட்ட மற்றும் மரணமடைந்தவர்களின் குடும்பங்களின் புனர்வாழ்வுக்கும் நட்டஈடு வழங்குவதாக அமையவேண்டும். வாக்குறுதிகள் யாவும் நடைமுறையில் நிறைவேற்றப்படுவதை சகல தரப்பினரும் உறுதிப்படுத்திக்கொள்ள தொடர்ந்து செயற்படவேண்டும்,

இச் சந்தர்ப்பத்தில், தமிழீழத்தில் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட பல சைவ ஆலயங்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன என்பதையும் கவனத்திற்கெடுக்க வேண்டும். இவைகளின் புனரமைப்புக்களுக்கும் கூட அரசு நட்டஈடு வழங்க வேண்டுமென எல்லாத் தரப்பினரும் போராடவேண்டும்,

# இன்று பொருட்காட்சி

கோப்பாய் மாதர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் தையல் மனையியல் கைப்பணிப் பொருட்காட்சி இன்று காலை 9 மணி முதல் 5 மணி வரை புத்தூர் குமரகுருபரன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# டில்லிக்கு விமான சேவை

கொழும்பு- புதுடில்லி நேரடி விமான சேவை எதிர்வரும் டிசம்பர் மாதம் முதல் ஏயர் லங்காவினால் ஆரம்பிக்கப்படவுள்ளது,

# ஒரு கோடியை தாண்டியது

ஜனாதிபதி வெள்ள நிவாரணநிதிக்கு இதுவரை ஒரு கோடி 12 இலட்சம் ரூபா நிதி அன்பளிப்பாகக் கிடைத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

# சர்வதேச அணியுடன் இலங்கை மோதும்!

பத்தலவரிணபுர, அனுரா தென்னக்கோன், மைக்கல் திரேசா, குணசேகரா, றோய் டயஸ் ஆகிய ஓய்வுபெற்ற ஐந்து புகழ்பெற்ற இலங்கை இரிக்கெட் வீரர்களுக்கு, நிதி திரட்டுமுகமாக இலங்கை இரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, ஆவணித்திங்கள் 8, 9 ஆம் நாள்களில், மட்டுப்படுத்தப்பட்ட பந்துமாற்றங்களைக் கொண்ட இரண்டு ஒருநாள் போட்டிகளை ஒழுங்குசெய்துள்ளது.

இப்போட்டிகளில் இலங்கை அணியை எதிர்த்துச் சர்வதேச அணி ஆடவுள்ளது சர்வதேச அணிக்குச் சுனில் கவாஸ்கார் தலைமை தாங்கி ஆடுவார் என்றும் இவ்வணியில் மனோஜ் பிரபாகர், ரவி சாஸ்திரி, இந்திய அணித் தலைவர் அஸாருதீன், வெங்சார்கர் ஆகிய புகழ்பெற்ற வீரர்களுடன் அவுஸ்திரேலிய அணி வீரர்களும் இடம் பெறுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை மேற்கிந்திய அணி வீரர் றிச்சட்ஸ், பாகிஸ்தான் வீரர் இம்றான் கான் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களிடம் இருந்து எந்தவித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

1985 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத இறுதியில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையில் இடம்பெற்ற 3 டெஸ்ட் போட்டிகளில் 1;0 என்ற கணக்கில் இலங்கை வெற்றி பெற்றது. அதனைத் தொடர்ந்து சுனில் கவாஸ்கர் எழுதிய புத்தகத்தில் 'இந்தியாவின் தோல்விக்கு முக்கிய காரணம். இலங்கை நடுவர்களின் வெறிபிடித்த ஒருதலைப்பட்சமான தீர்ப்புகளே' என்று விமர்சித்திருந்ததும் அல்லாமல் இனி ஒருபொழுதும் இலங்கையில் இடம்பெறும் கிரிக்கெட் ஆட்டங்களில் ஆடுவதில்லை என்று தான் சபதம் பூண்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 16

# சித்திரத் தேர்

சண்டிலிப்பாய் ஸ்ரீ ஹரிஹர புத்திர ஐயனார் தேவஸ்தானத்திற்கு புதிய சித்திரத் தேர் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன,

ஒரு வருடகாலத்தினுள் இத் தேரைச் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 37

